
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1003

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

28

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# “பொன்னேட்டினைப் புரட்டிய கலைஞர்!”

“பெண்கள் குஸ்தி கற்றுக்கொள்ள வேண்டும்; காவல் துறையில் பணியாற்ற வேண்டும்” என்று சுயமரியாதை இயக்கத் தொடக்க காலகட்டங்களிலேயே பேசியவர், தந்தை பெரியார். அதன் தொடர்ச்சிதான் 1929 செங்கல்பட்டு முதல் சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ‘பெண்களுக்கு சொத்துரிமை’ தீர்மானம்.

அப்போது கலைஞருக்கு ஐந்து வயது. அவரது ஐந்து வயதில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தை, 65-வது வயதில் சட்ட நடைமுறையாக மாற்றி, பெரியாரின் கொள்கைகளை நிறைவேற்றிக் காட்டினார்.

காவல் துறையில் பெண்கள், உள்ளாட்சிகளில் பெண்கள் என ஒவ்வொன்றாக நிறைவேற்றி வந்த கலைஞர், 1989 ஆம் ஆண்டு, தனது மூன்றாவது ஆட்சிக் காலத்தில் புரட்சிகரமாக நிகழ்த்திக் காட்டிய சட்டம்தான், பெண்களுக்கான சொத்துரிமைச் சட்டம். இந்து வாரிசுரிமை - தமிழ்நாடு திருத்தச் சட்டம் 1989 *The Hindu Succession (Tamil Nadu Amendment) Act, 1989.*

### பொன்னேடு புரளுகிறது

இந்த சட்டத்தைக் கொண்டுவந்து தீர்மானம் நிறைவேற்றிய 1989 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் தேதி, சட்டமன்றத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க உரையாற்றினார், கலைஞர். ‘புதியதொரு பொன்னேடு புரளுகிறது’ என்றார்.

“இந்த அவைக்கு பெருமை சேர்க்கக்கூடிய சட்டம் என்றாலும் சற்றொப்ப 60 ஆண்டு காலம் எந்த அளவிற்கு நாம் தூக்கத்திலே இருந்திருக்கிறோம் என்பதை மறந்துவிடுவதற்கு இல்லை.

இந்த 60 ஆண்டு காலத்தில் நாட்டிலே ஏற்பட்டிருக்கிற மறுமலர்ச்சி இயக்கத்தினுடைய தாக்கத்தை நாம் அனைவரும் உணர்ந்திருக்கிறோம். சமுதாயத்தில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற விழிப்புணர்வை நாம் அறியாதவர்கள் அல்ல, இத்தகைய விழிப்புணர்வுக்குப் பிறகும்கூட இன்றைக்கு இப்படி ஒரு சட்டம் வரும்பொழுது, இன்னமும் இந்த சட்டம் தேவையா? இதனால் என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்று எண்ணுகிறவர்கள் இல்லாமல் இல்லை. இது கட்சி சார்பற்ற முறையில் அனைவரும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சட்டமாக இன்றைய தினம் இங்கே நிறைவேறுகிறது” என்று கலைஞர் சட்டமன்ற உரையில் குறிப்பிட்டார். “இந்தச் சட்டத்தில் ஏதாவது குறைபாடுகள் இருக்குமானால், காலப்போக்கில் நடைமுறைப்படுத்துகின்ற நேரத்திலே உணர்ந்து, அதற்கேற்ப தக்க பரிகாரம் காணவும் இந்த அரசு தயங்காது” என்பதையும் உறுதியுடன் அறிவித்தார், கலைஞர்.

அப்படித்தான் 1989ஆம் ஆண்டு மே மாதம் 6-ஆம் நாள், நாட்டுக்கே முன்னோடி மாநிலமாக, பெண்களுக்கான சொத்துரிமைச் சட்டத்தை நிறைவேற்றியது, கலைஞர் அரசு. குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று 1990 ஆம் ஆண்டில் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

### முழுமையாகாத 1956 சட்டம்


அதற்கு முன்னர், பெண்களுக்கான சொத்துரிமைகளைத் தந்ததில் குறிப்பிடத்தக்க சட்டத்திருத்தம் 1956 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டம் வருவதற்கு முன்பு ‘இந்துப் பெண்கள் சொத்துச் சட்டம்’ என்று ஒன்று இருந்தது. இந்தச் சட்டத்தின் மூலம் பெண்களுக்குப் பிறந்த வீட்டில் தங்குவதற்கான உரிமை மட்டும்தான் இருந்தது. சொத்தில் எவ்வித உரிமையும் கிடையாது. பிறந்த வீட்டிலிருந்து கொடுக்கப் பட்ட சீதனம் மட்டுமே பெண்களுக்கான சொத்தாகக் கருதப்பட்டது. 1956 ஆம் ஆண்டு ஜூலை 4 ஆம் தேதி நிறைவேற்றப்பட்ட ‘இந்து வாரிசுச் சட்டம் 1956’ பெண்களுக்கு சொத்தில் பங்கு உண்டு என்று சொன்னது. ஆனால், அதிலும் பல கட்டுப்பாடுகள் இருந்தன. முழுமையானதாக இல்லை. பலத்த எதிர்ப்புகளுக்கு இடையில்தான் அந்த சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டது.

குறிப்பாக, ஒரு இந்து ஆணுக்கு மனைவி, இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள் இருக்கிறார்கள் என்றால், அந்த ஆண் இறக்கும் பட்சத்தில் அவரது சொத்துகள் மனைவி, மகன்கள் மற்றும் மகள்களுக்கு சம பங்குகளாகக் கிடைக்கும். இதில் அனைவருக்கும் சமஉரிமை உண்டு. ஆனால், பரம்பரை சொத்து, பிரிக்கப்படாத கூட்டுக் குடும்ப சொத்துகளில் எந்த உரிமையும் கோர முடியாது. இதனால், ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் சொத்துரிமை கோர முடியாதவர்களாக இருந்தனர்.

### பரம்பரை சொத்தில் உரிமை

1989-இல் கலைஞர் கொண்டு வந்த சட்டத்திருத்தம், இந்து வாரிசு உரிமைச் சட்டத்தின் பிரிவு 29-இல், ஒரு இந்து குடும்பச் சொத்தில் உரிமை உடைய ஒரு ஆண் போலவே, பெண்ணுக்கும் உரிமை உண்டு என்றது. அதாவது, பிரிக்கப்படாத கூட்டுக் குடும்ப சொத்திலும், பரம்பரை சொத்திலும் உரிமை அளித்தது.

பரம்பரைச் சொத்து பாகப்பிரிவினை செய்யப்படும்போது, அந்தச் சொத்தில் உரிமை உடைய ஒரு மகனோ அல்லது மகளோ இறந்துபோயிருந்தால், அப்படி இறந்துபோன மகன் அல்லது மகளுடைய வாரிசுகளுக்கும் அதே உரிமை உண்டு.



தவிர, ஒரு பெண்ணுடைய பெயரில் வாங்கப்பட்ட அல்லது தந்தை தாய் சொத்தில் ஒரு பெண்ணுக்குக் கிடைத்த சொத்துகள் அப்பெண்ணின் தனிஉரிமை சொத்தாகக் கருதப்படும் என்றது கலைஞர் கொண்டுவந்த சட்டத்திருத்தம்.

கலைஞர் கொண்டுவந்த சட்டத்திருத்தம் 1990 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தாலும், முன் தேதியிட்டு 1989 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் தேதியில் அறிவிக்கும்படி செய்தார் கலைஞர். 25.3.1989 தேதிக்கு முன்பு திருமணம் செய்துகொண்ட பெண்கள், பூர்வீகச் சொத்தில் பாகப்பிரிவினை கோர முடியாது. அதற்குப் பிறகு, திருமணம் செய்துகொண்ட பெண்கள் தனது தந்தையின் பூர்வீகச் சொத்தில் பாகப்பிரிவினை கோரலாம். அதேபோல, 25.3.1989 தேதிக்கு முன்பு சொத்து பாகப்பிரிவினை செய்யப்பட்டிருந்தாலும் பாகப்பிரிவினை கோரமுடியாது. ஒருவேளை சொத்து விற்கப்படாமலோ அல்லது பாகப்பிரிவினை செய்யப்படாமல் இருந்தாலோ உரிமை கோரலாம்.

அந்தத் தேதிக்குப் பின்னர் திருமணம் செய்துகொள்ளும் பெண்களுக்கு இச்சட்டத்தின் பலன் கிடைக்கும். திருமணம் செய்யாவிட்டாலும் உரிமை உண்டு.

### வழக்குகள் வாதங்கள்

இந்த சட்டத் திருத்தத்துக்கு சட்டமன்றத்தில் சிற்சில எதிர்ப்புக் குரல்கள் மட்டுமே எழுந்தன. மக்கள் மன்றத்தில் பெண்கள் மிகப்பெரிய உரிமையைப் பெற்றனர். ஆனால், அதற்கும் சில எதிர்ப்பாளர்கள் இருந்தனர். சொத்துரிமை சார்ந்து பல வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டன. அதே நேரத்தில், தமிழ்நாடு அரசின் சட்டம் செல்லாது என்றும் சில வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

எந்த வழக்கிலும் கலைஞர் கொண்டுவந்த சட்டத்திருத்தத்திற்குத் தடை விதிக்கப்படவில்லை. ஆனால், தமிழ்நாடு அரசின் சட்டத் திருத்தம் மற்றும் அது தொடர்பான வழக்குகளின் வாதங்கள் எல்லாம், பல மாநிலங்களில் சொத்துரிமை சார்ந்த வழக்குகளில் வாதங்களாக வைக்கப் பட்டன. அவை எல்லாவற்றையும் உச்ச நீதி மன்றம் ஒரே வழக்காகச் சேர்த்து வைத்துக் கொண்டே இருந்தது.

> “எந்த வழக்கிலும் கலைஞர் கொண்டுவந்த சட்டத்திருத்தத்திற்குத் தடை விதிக்கப்படவில்லை.”

...தொடரும்

## கவனம் பெற்ற விளையாட்டுத் துறை!

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் இந்திய ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகள் இரண்டும் தங்கம் வென்றுள்ளன. திருவாரூரைச் சேர்ந்த அபினேஷ் மோகன்தாஸ் ஆண்கள் அணியிலும், கண்ணகி நகரைச் சேர்ந்த கார்த்திகா பெண்கள் அணியிலும் இந்திய அணியின் வெற்றிக்கு முக்கியப் பங்காற்றி, தமிழ்நாடு அரசின் உயரிய ஊக்கத்தொகையாகத் தலா ரூ.25 லட்சம் பெற்றுள்ளனர். இதுதான் கடந்த சில நாட்களாகப் பேசுபொருள்.

கடந்த நான்கரை ஆண்டுகளில் இதுபோல பல சம்பவங்கள் விளையாட்டுத் துறையில் பேசுபொருளாகியுள்ளன. காரணம், தமிழ்நாடு அரசு விளையாட்டுத் துறைக்கு தரும் முக்கியத்துவம். திராவிட மாடல் அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், முதல் 4 ஆண்டுகளில் மட்டும் 4,617 விளையாட்டு வீரர், வீராங்கனைகள், மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசு சார்பில், உயரிய ஊக்கத் தொகையாக 152 கோடியே 52 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை தொடங்கப்பட்டு, 680 வீரர் – வீராங்கனைகளுக்கு ரூ.17 கோடி அளவுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. உதவிகள் பெற்ற 174 பேர் பதக்கங்கள் வென்று, தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளுக்கும் 16,798 விளையாட்டு உபகரணத் தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. சட்டமன்றத் தொகுதிகள்தோறும் மினி ஸ்டேடியங்கள் அமைக்கப் பட்டு வருகின்றன. செஸ் ஒலிம்பியாட், ஃபார்முலா – 4 கார் பந்தயம், சர்வதேச மகளிர் டென்னிஸ், ஸ்குவாஷ் உலகக் கோப்பை, ஆசிய ஆடவர் ஹாக்கி போட்டி, கேலோ இந்தியா போட்டிகள் என தமிழ்நாட்டு வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டுள்ளன.

விளையாட்டு வீரர்களை உற்சாகம் குறையாமல், உறுதி குலையாமல் தாங்கி நிற்கிறது, திராவிட மாடல் அரசு. அதன் வெளிச்சம்தான் உள்ளூர் போட்டிகள் முதல் சர்வதேச போட்டிகள் வரை பதக்கங்களாகக் குவிகின்றன என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

## ஃப்ளாஷ்பேக்



இரா.காளியப்பன்



### முரசொலி இதழைச் சேர்ப்பது என் கடமை!

முத்தமிழறிஞர், நம் தானைத் தலைவரின் மூத்த பிள்ளை முரசொலி நாளிதழின், முகவராகக் கடந்த 35 ஆண்டுகளுக்கு மேல் இருந்து வருகிறேன். 1995 ஆம் ஆண்டில், வேலூர் ஒருங்கிணைந்த மாவட்டத்திலேயே அதிக அளவில் முரசொலி நாளிதழ் விற்பனை செய்திருந்தேன். அதற்காகத் தலைவர் கலைஞர் அவர்களும் கழகப் பொதுச்செயலாளர், இனமானப் பேராசிரியர் அவர்களும் என்னை அழைத்துப் பாராட்டினர். இன்றும் முரசொலி நாளிதழைச் சுமப்பதை என் கடமை போல கருதி செயல்பட்டு வருகிறேன்.

**– இரா.காளியப்பன், ஜோலார்பேட்டை,**
**கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவைத் தலைவர்,**
**திருப்பத்தூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் உருவம்

### கழகத்தின் பலம் டி.வி.நாராயணசாமி

1940-களில் அறிஞர் அண்ணாவுக்குக் கதை, உரையாடல் எழுத முதல் வாய்ப்பு, ‘உதயணன்’ அல்லது ‘வாசவதத்தா’ கதையைத் திரைப்படமாக்க வாய்ப்பு வந்தது. நடிகமணி டி.வி.நாராயணசாமி அவர்களை கதாநாயகனாகப் போடுவதாக இருந்தால் எழுதுகிறேன் என்றார் அண்ணா. அந்த அளவுக்கு அறிஞர் அண்ணாவிடத்தில் ஈர்ப்பாக இருந்தவர், நாராயணசாமி. திராவிடர் கழகம், தி.மு.க.வில் முறையாக உறுப்பினராகப் பதிவு செய்துகொண்டு செயல்பட்டவர். திரைத்துறைக்கும் கழகத்துக்கும் பாலமாகத் திகழ்ந்தவர், டி.வி.நாராயணசாமி.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.